www.tamilarangam.net

# “மறந்ததோ வையம் மறத்தமிழ் இனத்தை”

## அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம்

## 30.10.96 - 05 .11 . 96



ஈழத்தமிழர் வரலாற்றில் மாபெரும் இடம்பெயர்வு நடந்து, 30 - 10 - 96 இல் ஓராண்டு நிறைவடைகிறது. சிறீலங்கா அரச பயங்கரவாதத்தினால் தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்டு, வன்னிப் பெருநிலத்திற்கு இடம் பெயர்ந்த எமது மக்கள் உரிய உணவின்றி, மருத்துவ வசதியின்றி, சுத்தமான குடிநீரின்றி, இருப்பிட வசதியின்றி, காடுகளிலும் தெருவோரங்களிலும் அலைந்து திரிகின்றார்கள். இதேவேளை, தென்தமிழீழத்திலும் யாழ்குடாநாட்டிலும் சிறீலங்கா இராணுவப்பிடிக்குள் சிக்கியுள்ள எமது மக்கள் கைது செய்யப்படுவதும் காணாமல் போவதும், பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு - கொலை செய்யப்பட்டு வீசப்படுவதும் நாளாந்த நிகழ்வுகளாகி வருகின்றது. செய்தியாளர்களுக்கு விதிக்கப்பட்ட தடையினாலும், சிறீலங்கா அரசின் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தினாலும் இம்மாபெரும் மனித அவலம், போதியளவு சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்ததாக இல்லை. எம்மக்களின் அவலங்களைச் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்துடனேயே, தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் 30 - 10 - 96 தொடக்கம் 05 -11 - 96 வரையிலான 7 நாட்களும் அனைத்துலக கவன ஈர்ப்பு வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

### அன்பான பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களே!

இக் கவன ஈர்ப்பு வாரத்தில்,

* 30 -10 -96 அன்று பொது இடங்களில் உண்ணாவிரதங்களை மேற்கொள்ளல்.
* ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு பொதுவான அஞ்சல் அட்டையினை அனுப்பி வைத்தல்.
* உங்கள் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு எம்மக்களின் உண்மை நிலையைத் தெரியப்படுத்தல்.
* 30 - 10 - 96 அன்று மதியம் 1 மணிவரை எமது வியாபார ஸ்தாபனங்களைப் பூட்டி கவன ஈர்ப்பு வாரம் ஆரம்பிப்பதனை வெளிப்படுத்தல்.
* பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிலையங்களில் எமது மக்களின் அவலங்களை வெளிப்படுத்தல்.

போன்ற செயற்திட்டங்களில் பங்கெடுத்து, எமது மக்களின் பாதுகாப்புக்கும் எதிர்கால நல்வாழ்வுக்கும் உதவ வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும். இக் கவன ஈர்ப்பு வாரச் செயற்திட்டங்களில் நேரம் ஒதுக்கி, இணைந்து செயற்பட விரும்புவோர், கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களுடன், உடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**எமது மக்களின் துயரங்களை, சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த அணிதிரள்வோம்!**

சர்வதேச தமிழர் சம்மேளனம்:- 0171 403 4554, 0956 256 098 0956 314 370, 0181 503 4294